# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம்.

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 05.06.2015 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் , மாகாணக் கல்வித் திணைக்களம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள்(யாழ்ப்பாணம், வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார்)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்,வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி,முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு)
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்,வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி,தீவகம்,முல்லைத்தீவு,துணுக்காய்,வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு,மன்னார், மடு )
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வித் திணைக்களம், தீவகம், மன்னார், மடு)
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்
- நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம்,கிளிநொச்சி.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு முதலாவது மாகாண மட்டத்திலான கல்வி அபிவிருத்திக் கூட்டத்தினை நடத்த இருக்கின்றோம். அந்தவகையில் வேலைகள் சம்பந்தமாக பார்த்தோமாயின் வேலைகள் சம்பந்தமாக இந்த வருடம் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்? அனுமதிக்கப்பட்ட வேலைகள் என்ன? என்னென்ன வேலைகளை செய்கின்றோம்? முன்னேற்றம் என்னமாதிரி இருக்கின்றது? அதேவேளை சென்ற வருடமும் சில வேலைகள் செய்து முடிக்கப்படாது உள்ளது. அந்த வேலைகளை செய்து முடிக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என பார்க்கலாம். எம்மால் தொகுக்கப்பட்டு தரப்பட்ட தகவல்கள் முழுவதாக தரவேற்றம் (Update) செய்யப்படாது இருக்கலாம். இது முதலாவது மாகாணமட்டத்திலான கல்வி அபிவிருத்திக் கூட்டமாக இருப்பதனால்

தரவுகள் சரியாக தரப்படாது இருக்கலாம். அதேவளை மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு புதிதாக கணக்காளர் ஒருவர் வந்துள்ளார். அவரையும் வரவேற்றுக்கொண்டு ஏனைய கணக்காளர்களும் ஒன்றிரண்டு பேர் இடமாற்றமாகி வந்துள்ளீர்கள் அவர்களையும் வரவேற்றுக்கொண்டு முன்னேற்ற அறிக்கையை (Progress) தொடர்பான முன்னளிக்கைகள் (Presentation) செய்யப்பட்டது.

அடுத்து இவ் முன்னளிக்கையினுள் சில வேலைகள் உள்ளடக்கப்படாது இருப்பதாக செயலாளர் தெரிவித்தார். அவைகள் தொடர்பான விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறியத்தர வேண்டும். சகல வேலைகளும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். அதற்குரிய முன்னேற்றங்களை நாம் பார்க்க வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தினுள் உள்ளடங்கும் வேலைகள் தொடர்பான விபரங்கள் எமக்கு அனுப்பப்பட வேண்டும். அவை தொடர்பான விபரங்களை அடுத்தமுறை நாம் முன்னளிக்கைகளினுள் (Presentation) உள்ளடக்கப்பட வேண்டும். கணக்காளர்கள் கொடுப்பனவுகள் செய்யப்பட்டவுடன் செலவினத்தினுள் உள்ளடக்கி வேண்டுகையை எமக்குப் பிரதியிட்டு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். மாகாணக் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளரினால் இக் கூட்டத்தினை இரு நாட்கள் பிந்தி வைப்பதன் மூலம் செலவினங்களை மீளாய்வு (Re checking) செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார். அடுத்த கூட்டத்தினை மாதத்தின் இரண்டாம் கிழமை வைக்க நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் உறுதியளித்தார்.இந்த வருட வேலைகளை இந்த வருடமே முடிக்கப்பட வேண்டும். அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்லக்கூடாதென செயலாளர் தெரிவித்தார். முன்னளிக்கையில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டது.

- TSEP திட்டத்தினுள் உள்ளடங்கப்படும் வேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
- PSDG 2014 வேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
- 1000 பாடசாலை வேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
- TSEP 2014 திட்டம் தொடர்பான முன்னளிக்கை பரிசிலிக்கப்பட்டது.
- அடுத்ததாக நிதி விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.
- நிர்வாக விடயம் தொடர்பாக பரிசிலிக்கப்பட்டது.
- நடமாடும் சேவை இம்மாதம் 18 ஆந் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலிநகரில் துணுக்காயும் பாண்டியன்குளமும் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தப்படவுள்ளது.
- அதே நேரம் யாழ்ப்பாண மாவட்ட வலயங்களிற்கு மட்டும் சிறுவர் நன்னடத்தை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடக்கவிருக்கின்றது. அதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களும், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும் அங்கு செல்தல் வேண்டும்.
- தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் சில இடங்களில் கட்டப்படவில்லை. அதனையும் கவனத்திலெடுக்கும்படி கோரியிருக்கின்றோம். அதற்கு சாதகமான பதில் கிடைக்குமென

நம்புகின்றேன்.திறக்கப்படாத தொழிநுட்ப ஆய்வுகூடங்களை இம்மாதம் 30 ஆந் திகதிக்குள் திறக்கும்படி செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.தொழிநுட்ப ஆய்வுகூடங்களை முழுமையாக பாவிப்பதனை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார். மின்சாரப் பட்டியல் பற்றி அடுத்த கூட்டத்தில் கதைக்கப்படும்.

- அடுத்து E-Learning தொடர்பாக 82 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.
- விழுமியக்கல்வி தொடர்பான புத்தகங்கள் அனைத்து வலயங்களிற்கும் விநியோகிக்கப்பட வேண்டும்.
- இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களை விடுவித்தல் வேண்டும். அதனால் தீவக வலயத்திற்கு இதுவரை ஆசிரியர்கள் கடமையை அறிக்கையிடவில்லை.
- க.பொ.த(உ/த) கருத்தரங்கு வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 13 ஆந் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான ஒழுங்குகளை செய்யும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார்.
- விழிப்புணர்வு வாரம் செய்யும்படி அறிவுறுத்தியிருந்தோம். அது தொடர்பான அறிக்கையை எமக்கு அனுப்பிவைக்கவும்.
- மாநாட்டின் பரிந்துரையின்படி நீண்டகால விடுமுறையில் உள்ள ஆசிரியர்களுக்காக ஓய்வுபெற்ற 60-65 வயதிற்கிடைப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களை கோரியிருந்தோம். அது தொடர்பான விபரங்களை எமக்கு அனுப்பிவைக்கவும்.
- விசேட கல்வித் தேவையுள்ளவர்களிற்கு 750/= கொடுப்பதற்கான படிவம் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதனை நிரப்பி அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.
- பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஒரு கொட்டகையுடன் இருக்கும் பாடசாலைகளின் விபரங்களை கோரியிருந்தோம். குறிப்பாக கிளிநொச்சி முல்லைத்தீவு விசேட வலயங்களாக பிரகடனப்படுத்தி இருப்பதனால் அவற்றில் ஒரு கொட்டகைகள் இருக்கும் பாடசாலைகள், கட்டி முடிக்கப்படாத பாடசாலைகள் மற்றும் தேவைப்பாடுகள் உடைய பாடசாலைகள் என்பன பற்றி கேட்டிருந்தோம். அது பற்றிய விபரங்கள் இது வரை கிடைக்கவில்லை. அடுத்தது 2016 ஆம் ஆண்டிற்கு செய்ய வேண்டிய அவசர, அவசிய வேலைகளை கோரியிருந்தோம். அது தொடர்பான விபரங்களை நாம் அனுப்பவேண்டியுள்ளது.
- அடுத்து ஆசிரிய வள நிலையங்கள் தொடர்பான விபரங்களை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அவற்றினை சிறப்பாக இயங்க நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் உறுதியளித்தார்.
- அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து கடிதங்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. அவற்றிற்கு பதில் எழுதுதல் வேண்டும்.
- அடுத்த மாதம் ஆடிப்பிறப்பு தினத்தை கொண்டாடுவதற்கான சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது. அதனை கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

- புத்தளத்திலுள்ள ஆசிரியர்கள் மன்னார் வலயத்தில் வந்து கற்பிக்க வேண்டும். இல்லாதுவிடில் புத்தளத்திற்கு விடுவித்தல் வேண்டும்.
- மாணவர்கள் பாடசாலைக்கு வராத வேளையில் பெற்றோருக்கு அறிவித்தல் அனுப்பும் நடவடிக்கை பற்றி வினவப்பட்ட பொழுது அது தொடர்பாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கடித மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.
- உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படும் மோட்டார் வண்டிகளின் திருத்தம் தொடர்பாக வினவப்பட்ட பொழுது மோட்டார் வாகனங்களின் திருத்தத்திற்கு அனுமதி இல்லை எனவும் ஏலத்தில் விடுவதற்கு பிரதம செயலாளரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார். ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன்படுத்துபவருக்கே உரிமை மாற்றம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது.

## பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | RO plant மூலம் முல்லைத்தீவு பாடசாலைகளில் நீர் சுத்திகரிப்பு | RO plant மூலம் முல்லைத்தீவு பாடசாலைகளில் நீர் சுத்திகரிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். | வலயக் கல்விப் பணிப்பாளர் (முல்லைத்தீவு)<br>தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| 02. | இவ் வருட வேலைகள் அனைத்தும் இவ் வருடத்தினுள் செய்து முடிக்கப்பட வேண்டும். | இந்த வருடம் ஆறு மாதங்கள் முடிவடைந்துள்ளது அடுத்த ஆறு மாதங்களுள் அனைத்து வேலைகளும் முடிவடைய வேண்டும். முன்னேற்ற அறிக்கையை (Progress Report) பார்த்து வேலைகள் முடிவடையாது இருந்தால் அதனை வேறு வேலைகளுக்கு மாற்றப்படுமென செயலாளர் தெரிவித்தார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்<br>சகல தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் |
| 03. | PSDG திட்டத்தினுள் முன்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக | PSDG திட்டத்தினுள் முன்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பாக வினவப்பட்ட பொழுது 100 நாள் வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட முன்பள்ளிகளை மாற்றித் தரும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். அதற்கு உடனடியாக அனுமதி தரப்படுமென செயலாளர் அவர்கள் உறுதியளித்தார். | |
| 04. | கொடுப்பனவிற்கான சிட்டைகளை (Bills) உரிய | மன்னார் வலயத்திலிருந்து திங்கட்கிழமை கொடுப்பனவிற்காக சிட்டை (Bill) வராவிட்டால் | தொழிநுட்ப உத்தியோகத்தர் (மன்னார் வலயம்) |

| | | | |
|---|---|---|---|
| | நேரத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். | கொடுப்பனவிற்கு தொழிநுட்ப உத்தியோகத்தரே பொறுப்பாளியாக வேண்டுமென செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. | |
| 05. | தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் இடமாற்றம் | வேறு மாகாணத்தை சேர்ந்த இரண்டு தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தினை இரத்துச் செய்வதாக செயலாளர் அவர்கள் உறுதியளித்தார். | |
| 06. | 2016 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு(Budget) தொடர்பானது | 2016 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு(Budget) தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சென்ற மாதம் நியமிக்கப்பட்ட ஆசிரிய நியமனங்கள் இதுவரை பாதீட்டினுள் உள்ளடக்கப்படவில்லை. அத்துடன் இணையத்தளத்தினுள்ளும் (Online) தரவேற்றம் (Update) செய்யப்படவில்லை. அதனை விரைவாக தரவேற்றம்(Update) செய்யும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். | அனைத்து வலயக் கல்வி அலுவலகத்திலுமுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) |
| 07. | ஆசிரியர் சம்பள நிலுவை தொடர்பானது | ஆசிரிய சம்பள நிலுவை தொடர்பாக ஆசிரிய உள்ளீர்ப்பு செய்யப்பட்டு சம்பள மீளமைப்பு (Salary Conversion) செய்து விரைவாக சம்பள நிலுவைகளை வழங்கும் படி கேட்டுக்கொண்டார். பாடசாலை நேரத்திற்கு பின்னர் ஆசிரியர்களை எடுத்து அலுவலக வேலைகளை செய்யும்படியும் அதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. பாடசாலைகளில் ஆசிரிய ஆளணி மிகையாக இருக்கும்பட்சத்தில் மிகையான ஆசிரியர்களை அலுவலக வேலைகளுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இம் முறை சம்பள நிலுவைப் பணத்தினை பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுத் தருவதாயின் ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை கணக்கீடு செய்து முழு விபரங்களையும் தந்தால் மாத்திரமே ஒதுக்கீட்டினை பெற்றுத்தர முடியும் எனத் தெரிவித்தார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல வலயங்களிலுமுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்) |
| 08. | ஆசிரிய உதவியாளர்களுக்கும் பகுதிநேர ஆசிரியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக | ஆசிரிய உதவியாளர்களுக்கும் பகுதிநேர ஆசிரியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக யாழ்ப்பாண வலய கணக்காளரினால் வினவப்பட்டபொழுது எமது அறிவுறுத்தலுக்கமைய செயற்படும்படி கல்வி அமைச்சின் கணக்காளரினால் தெரிவிக்கப்பட்டது. | |

| | | | |
|---|---|---|---|
| 09. | கணக்காய்வு ஐயவினா (Audit Quarry) தொடர்பாக | கணக்காய்வு ஐயவினா (Audit Quarry) தொடர்பாக நிறைய கணக்காய்வு ஐயவினாக்கள் வருகின்றன. பாடசாலைகளுக்கும் சென்று கணக்காய்வு செய்யப்படுகின்றது. இதற்கு பதில் அனுப்புவது தொடர்பாக வேறு கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்படும். | |
| 10. | வலயக் கல்வி அலுவலகங்களின் வங்கிக் கணக்குகள், கொடுப்பனவுகள் தொடர்பாக | அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களும் மூன்று வங்கிக் கணக்குகள் வைத்திருப்பதாகவும் புகையிரத ஆணைச்சீட்டு, அலுவலகப் பணியாளர்களுக்கான சீருடைக் கொடுப்பனவுகளுக்கு உறுதிச்சிட்டுக்கள் இருப்பதாகவும் அவற்றிற்கு மத்திய அமைச்சினால் நிதி ஒதுக்கப்படவில்லை எனவும் மாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக்காளரினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு செயலாளர் பதிலளிக்கையில் இது தொடர்பாக கோரிக்கைக் கடிதம் அனுப்பும்படியும் எமக்கு ஒரு பிரதியிட்டால் தானும் அது பற்றி கதைப்பதாகவும் தெரிவித்தார். புதிய சுற்றுநிருபத்தின்படி கருத்தரங்குகளிற்கு (Seminar) அதிக செலவு ஏற்படுவதாகவும் ஆனால் அதற்கான ஒதுக்கீடு குறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் அலுவலகர்களுக்கான போக்குவரத்துப் படி (Travelling Claim) தொடர்பாக வினவப்பட்ட பொழுது வழமையான நடைமுறையின்படி அதனை அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. | வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 11. | 11/2015 சுற்றுநிருபம் தொடர்பாக | பொதுநிர்வாக அமைச்சினால் புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 11/2015 20.05.2015 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அது அனைவருக்கும் அனுப்பிவைக்கப்படும். இது தொடர்பாக செயலாளரினால் வாசித்து விளக்கமளிக்கப்பட்டது. அதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டுமென செயலாளர் கேட்டுக்கொண்டார். | |
| 12. | ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு தொடர்பாக | ஆசிரியர்களின் உள்ளீர்ப்புக் கடிதங்கள் இன்னும் ஆசிரியர்களை சென்றடையவில்லை என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஏதாவது தடங்கல்கள் இருக்கிறதா என வினவப்பட்ட பொழுது போட்டோப் பிரதி எடுப்பதில் சிக்கல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இது | வ.க.ப பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கவனமெடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. இனி ஒரு பிரதிக்கோவை (Sub File) கல்வி அமைச்சில் பேணப்பட உள்ளதனால் இனிவருங் காலங்களில் ஆவணங்களின் போட்டோப்பிரதி தேவையில்லையென தெரிவிக்கப்பட்டது. ஆசிரிய உள்ளீர்ப்பு தொடர்பாக விசேட ஒதுக்கீட்டின் மூலம் காகிதாதிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்ப்பட்டது. | |
| 13. | அதிபர்களின் சம்பள நிலுவை தொடர்பாக | அதிபர்களின் சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளதா என வினவப்பட்ட பொழுது உள்ளீர்ப்பு கடிதங்கள் மத்திய கல்வி அமைச்சினால் நேரடியாக அதிபர்களுக்கு வழங்கப்படுவதாகவும் தாமதித்தே வலயங்களிற்கு கிடைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. | வ.க.ப பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 14. | அதிபர்களின் நியமனம் தொடர்பாக | அதிபர்களின் நியமனம் தொடர்பில் இனிவருங் காலங்களில் கடமை நிறைவேற்று அதிபர் நியமனம் செய்யப்பட மாட்டாது எனவும் அதிபர் இல்லாதவிடத்து அதிபர் கடமையை கவனிப்பதற்கு மாத்திரமே அனுமதி தரப்படுமெனவும் ஜூன் 9 ஆந் திகதி அதிபர் தரம் -I ஐச் சேர்ந்தவர்களிற்கான இடமாற்றம் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அடுத்து அதிபர் தரம் - II, தரம் - III இல் உள்ளவர்களின் விபரங்களும் எம்மால் கேட்கப்பட்டிருந்தது. அதனை எமக்கு அனுப்பிவைக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது. ஜூலை 1 ஆம் திகதி 1 AB, 1C பாடசாலைகளுக்கான அதிபர் நியமனமும் செப்ரெம்பர் 1 ஆம் திகதி தரம் -II, தரம் -III பாடசாலைகளுக்கான அதிபர் நியமனமும் செய்யப்படும். | வ.க.ப பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 15. | ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக | இடமாற்றம் தொடர்பாக இடையில் எந்த ஆசிரியர்களையும் மாற்ற வேண்டாமெனவும் அவசிய தேவை எனில் அடுத்த தவணை ஆரம்பத்தின் போது மட்டுமே இடமாற்றம் வழங்க வேண்டும் எனவும் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டிற்குரிய இடமாற்றம் இடமாற்ற சபை செய்யக்கூடிய இடமாற்றக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஜூன் 8 ஆம் திகதி கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுடன் கதைத்து மாகாண அமைச்சர் வாரியத்திற்கு | மாகாண கல்வி அமைச்சு செயலாளர். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படும். புதிய நியமனம் செய்யப்பட்டிருந்தால் மாத்திரம் பழைய ஆசிரியர்களை இரண்டாம் தவணை விடுமுறைக்குள் இடமாற்றம் செய்யலாம். | |
| 16. | தொழிநுட்ப பாடங்களிற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பாக | தொழிநுட்ப பாடங்களிற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பில் விபரங்களை எமக்கு அனுப்பிவைக்கப்பட்டால் விசேடமாக பொறியியல் பாடங்களைப் பழிப்பிப்பதற்கு தேவை எனில் பொறியியல் சபையுடனும் (Engineering Board) பொறியியலாளர்களுடனும் கதைத்துள்ளோம். அவர்களை வருகைதரு விரிவுரையாளர்களாக (Visiting Lecturer) தேவையான பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பான மாதிரிப் பரீட்சைத் தாள்களை தயாரித்து தரும்படி கோரிக்கை விடப்பட்டது. | |
| 17. | தொண்டராசிரியர்கள், பாடசாலைப் பணியாளர்களின் நியமனங்கள் தொடர்பாக | தொண்டராசிரியர்கள், பாடசாலைப் பணியாளர்களை புதிதாக நியமிப்பதனை நிறுத்த வேண்டும். இது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. புதிய சேவை அறிக்கையின்படி (Service minutes) இனி வைத்திருக்க முடியாது. 1AB,1C, Type - II பாடசாலைகளுக்கு எங்கு வெற்றிடம் உள்ளதென தந்தால் அமைச்சர் வாரியத்திற்கு சமர்ப்பித்து பாடசாலை ரீதியாக பத்திரிகைகளில் பிரசுரித்து வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். மூன்றாம் தவணை ஆரம்பத்தில் நியமிக்க நடவடிக்கை எடுக்க விரைவாக செயற்பட வேண்டும். | வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர்கள் |
| 18. | கல்வி சாரா ஊழியர்களின் ஆளணி தொடர்பாக | ஆளணி தரவேற்றம் செய்யப்பட வேண்டும். கல்வி சாரா ஊழியர்களின் ஆளணி சீர்செய்யப்படுகின்றது. இது தொடர்பான விபரங்களை தந்தால் அதனை பிரதம செயலாளரின் செயலகத்தில் இறுதி முடிவெடுத்து முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுத் தரப்படும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 19. | பாடசாலை சுகாதார சேவை சம்பந்தமாக | பாடசாலை சுகாதார சேவை சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது. அதனை | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| 20. | பாடசாலை விடயங்களில் மேற்பார்வை அணி (Supervise Team) சென்று மேற்பார்வைகளை ஒழுங்காக செய்வதனை உறுதிப்படுத்தல் | பாடசாலை விடயங்களில் மேற்பார்வை அணி (Supervise Team) சென்று மேற்பார்வைகளை ஒழுங்காக செய்வதனை உறுதிப்படுத்தி எமக்கு அறிக்கையிடவும். சில பாடசாலைகளில் நண்பகல் 12.00 பின் பாடங்கள் நடப்பதில்லை என்ற முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அது தொடர்பாகவும் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 21. | 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக | 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேறாக்கப்பட்ட ஆரம்பப்பிரிவினை மீளவும் ஆரம்பிக்க சில பாடசாலைகளில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். நாம் அந்தப் பாடசாலையின் ஆரம்ப்பிரிவை அதே வளவில் வேறாக இயங்க அனுமதி வழங்கியிருக்கின்றோம். சில ஆரம்பப்பிரிவுகளை பிரித்து தரும்படியும் கேட்டிருக்கின்றோம். | மத்திய கல்வி அமைச்சுச் செயலாளர் (தேசிய பாடசாலைகள்) |
| 22. | இரண்டாம் தவணைபரீட்சைக்குரிய நடவடிக்கை தொடர்பாக | இரண்டாம் தவணைபரீட்சைக்குரிய நடவடிக்கை பற்றி செயலாளரினால் வினவப்பட்டது. மாணவர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணங்களை அறவிடமுடியாது என சுற்றறிக்கை உள்ளது. அது தொடர்பாக கலந்துரையாடிய பின் இறுதி முடிவெடுக்கப்படும். | |

இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு நிறைவு பெற்றது.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.